அறிமுக நூல் – 4

# பொருநர் ஆற்றுப்படை



இரா.இளங்குமரனார்

அறிமுக நூல் வரிசை - 4

# பொருநராற்றுப்படை

இரா.இளங்குமரன்

# அறிமுகத்திற்கு அறிமுகம்

தொடக்க நாளிலேயே ‘செந்தமிழ்’ எனப்பட்ட நம்மொழி, இப்பொழுது ‘செம்மொழி’ என்னும் சிறப்பை நடுவன் அரசால் அடைந்திருக்கிறது. அத்தகுதிக்குக் காரணமாக இருந்த நூல்களை எல்லாம் இளம்பருவ மாணவர்களும், ஓரளவே தமிழ்ப் பயிற்சியுடைய பெரியவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் ‘அறிமுகநூல்கள்’ வெளியிட வேண்டும் என்று அவாவினார், அன்புத் தோன்றல், செயல்வீறுமிக்க தன்மானத் தமிழர், புரட்சிக் கவிஞர் மன்ற நிறுவனர் தமிழ்த்திரு **பி.வரதராசனார்**. அவர் விருப்பை நிறைவேற்றும் வகையிலும், என் எண்ணப்பதிவும் அதில் ஒன்றியதாலும், தொடர்ந்து செம்மொழிக்கு உரியவும் பிறவகையால் தமிழ்வளமாவதுமாம் கலை வள நூல்களையும் அறிமுக நூல்களாக வெளியிட இசைந்தேன்.

அவ்வரிசையில் தொல்காப்பியம், திருக்குறள், திருமுருகாற்றுப்படை அடுத்து செம்மொழி நூல்வரிசையுள் நான்காவதாக வெளிவருவது இப்பொருநர் ஆற்றுப்படை. பத்துப்பாட்டில் இரண்டாவதாக இடம் பெறும் இந்நூல், ஆற்றுப்படை வரிசையிலும் இரண்டாவதாம்.

முன்னைத் தொல்காப்பிய, திருக்குறள் அறிமுக நூல்கள் பெற்ற வரவேற்பும், அவ்வெளியீட்டில் கண்ட விற்பனைப் பெருக்கமும், பருகுவார் போல் கேட்ட அவையச் சிறப்பும், பரப்புதல் உந்துதல் அவர்களுக்கு உண்டாகிய தமிழ்ப்பயனும், நூலாசிரியனுக்கும், வெளியீட்டினர்க்கும் பேருவகை ஆவதாம்! ‘தமிழ்மொழி’ ‘இனமீட்பர் பெருகுவர்’ என்னும் நம்பிக்கையைப் பெருக்குதல் நற்பேறாம். ஆதலால், இத்தொடர் தொய்வின்றித் தொடர்வதுடன், பெருக்கத் தொடராகச் சிறக்கத் தூண்டும் என்பதும் உறுதியாம்.

பரப்பாளர் என்பார், புரப்பாளருமாம் சிறப்பு வெளிப்பாடு இஃதாம்.

வாழிய நலனே!

வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,


**இரா.இளங்குமரன்**

10-10-2013

திருவள்ளுவர் தவச்சாலை,

அல்லூர், திருச்சி-620 101

## வெளியிட்டு மகிழும்




## புரட்சிக் கவிஞர்
## மன்றம்

75, வடக்குமாசி வீதி, மதுரை-1
அலைபேசி : 94437 10219

அச்சிட்டு மகிழும்






# மணியம்மை

## மழலையர் தொடக்கப்பள்ளி

வடக்குமாசி வீதி, மதுரை–1
தொலைபேசி : 0452 2626111

அறிமுக நூல் வரிசை - 4

# பொருநர் ஆற்றுப்படை

***பொருநர் ஆற்றுப்படை எத்தொகுதியில் இடம் பெற்றுள்ளது?**

பொருநர் ஆற்றுப்படை, சங்கப் பாட்டு நூல்கள் பத்தனுள் இரண்டாவதாக வைக்கப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படையை அடுத்துள்ளது, ஆதலால், ஆற்றுப்படை நூல்களுள் இரண்டாவதாக அமைந்ததும் இதுவாம்.

***பொருநர் என்பார் எவர்? விளக்குக**

பொரு = ஒப்பு; நர் = சொல்லீறு. ஒருவரைப்போல் வேடமிட்டுக் கொண்டு ஆடிப்பாடிப் பரிசில் பெறுபவர் பொருநர் எனப்படுவார். பொரு; பொருவ என்பவை உவமை உருபுகள். உடுத்த ஒருடையுடன் பொருந்த மேலுடையாம் சட்டை பொருந்த வளையல் காதணி முதலியவை பொருந்த-ப் பார்க்கும் இந்நாள் மக்கள் பார்வையை நோக்கின், ஒப்புப் பொருள் தெளிவாகும். பொருந்துதல், பொருத்தம் என்பனவும் எண்ணுக. பொருநருள் இருவகையர்: ஒருவர், போர்க்களம் பாடுபவர்; மற்றொருவர் ஏர்க்களம் (உழவர் களம்) பாடுபவர்.

***பொருநர் ஆற்றுப்படையில் வரும் பொருநர், எவ்வகைப் பொருநர்? எப்படி அறியலாம்?**

பொருநர் ஆற்றுப்படையில் வரும் பொருநர், போர்க்களம் பாடும் பொருநர். அவர் பாடலில், பனம் பூமாலை அணிந்த சேரனும் வேப்பம் பூ மாலை அணிந்த பாண்டியனும் வெண்ணிப் பறந்தலைப் போரில் அழியப் போரிட்டவன் கரிகால்சோழன் என்பதை,

“இருபொரு வேந்தரும் ஒருகளத் தொழிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்” (146-148)

என்பதால் புலப்படும்.

***பொருநராற்றுப்படையைப் பாடிய புலவர் யார்? அவரைப் பற்றி அறிவன எவை?**

பொருநராற்றுப்படையைப் பாடியவர் **'முடத்தாமக் கண்ணியார்'** என்றும் பெயரினர்.

முடத்தாமக்கண்ணி என்பது இவர் பெயர் என்றும், ஒருவரைக் கூறும் பன்மையாம் 'ஆர்' என்னும் ஈறு சேர்த்து 'முடத்தாமக் கண்ணியார்' எனப் பெயர் பெற்றார் என்றும் சேனாவரையரும் நச்சினார்க் கினியரும் கூறுவர் (தொல்.)

**'கண்ணி'** என்பது கண்ணையுடையவரைக் குறிக்கும் வழக்குண்மையால், இவரைப் பெண் பாற்புலவர் என்பர். குவளைக் கண்ணி, கயற்கண்ணி என்பவை எண்ணுக. கூந்தல் உறுப்புகள் ஐந்து; அவை, "**தாமம்** முகுடம் பதுமம் கோடகம், கிம்புரி முடியுறுப் பைந்தெனக்கிளப்பர்" என்பது திவாகரம்.

"ஐவேறு உருபின் செய்வினை முற்றிய முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி" முகம், எனத் திருமுருகன் முகம் கூறப்படலால், பெண்டிர் முடியே யன்றி, ஆடவர் முடியும் **தாமம்** கொண்டது அறியலாம் (முருகு 83-84)

முடம் - வளைவு: தாமம் - முடியுறுப்பு; பாடுவோன் பொருநன் ஆதலால், தன்னைப் புனை கோலம் கொண்ட முறை குறித்த பெயராகலாம்! முடம் என உறுப்புக் குறை சுட்டல் அழகிய தன்றாம். முடத்திருமாறன் பெயருண்டேனின், முட்டத்திருமாறன் எனப் பாடமும் உண்டாம். முட்டமாவது ஊர்ப் பெயர். எ-டு: திருமுட்டம் > திருமுஷ்ணம். 'முட்டத்துப்பன்றி' என்பதொரு தனிப்பாடல்.

***பொருநராற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் யார்?**

பாட்டுடைத்தலைவன், சோழன் **கரிகாற் பெருவளத்தான்** என்பான், பத்துப்பாட்டில் ஒன்பதாம் பாட்டாக வரும் **பட்டினப் பாலையின்** பாட்டுடைத் தலைவனும் இவனே இவன் தந்தை, **உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி** என்பான்.

இவனை இப்பாட்டு,

“வெல் வேல்,
உருவப்பஃறேர் இளையோன் சிறுவன்”

என்கிறது. (129-130). உருவம் = அழகு. பஃறேர் - பலதேர்; இளையோன் - இளஞ்சேட் சென்னி, சிறுவன் - மகன்.

***பொருநராற்றுப்படையின் பாட்டமைதி கூறுக.**

பொருநராற்றுப்படை, அகவற்பாவால் அமைந்தது. ஆயினும், ஆசிரிய அடியொடும், வஞ்சியடியும் கலந்து வந்து ஓசை நயம் ஊட்டிச் சிறக்கின்றது. இதிலுள்ள மொத்த அடிகள் 248. இவற்றில், அகவல் அடிகள்: 202. வஞ்சி அடிகள்: 46.

***பரிசில் பெற்றுச் செல்லும் பொருநன், பரிசில் பெற விரும்பித் திரியும் பொருநனுக்குக் கூறுவதென்ன?**

“விழாக் கொண்ட நகரில் விரும்பிய உணவு வகைகளை உண்டு, இனி விழா நிகழும் நகர் உண்டோ என விரும்பி அலையும் பொருநனே, யாழை யுடையவனே, பிறர் புகழ் கூறி, அவர் புகழை மேலேயும் பெருக்க வல்லவனே, நீ வேறொரு வழியில் செல்லாமல், யாம் வரும் இவ்வழியில் உன் கூட்டத்தொடும் வந்தது பெருநலமேயாம்! உன் வறுமைத் துயரைப் போக்க விரும்பினையானால், யான் கூறுவதைக் கேள்” என்றான்.

***பரிசில் பெற்ற பொருநன் மேலே கூறியதென்ன?**

பழ மரங்களை விரும்பும் பறவைகளைப் போலப், பரிசில் தருவாரைத் தேடி அலைந்தேன். என் நற்பேறாகச் சோழன் கரிகாற் பெருவனத்தான் அரண்மனையை அடைந்தேன்; தடை எதுவும் இல்லாமல், உரிமையாய் உள்ளே புகுந்தேன்; அவனைப் பாடினேன்; அவன் இன்மொழி கூறித் தன்னொடும் இருக்கச் செய்தான். அன்பொடு என்னைப் பார்த்த அவன், என் வறுமைக் கோல உடையை நீக்கிப் பொலிவு மிக்க புத்துடை வழங்கினான்.

அரண்மனையில் இருந்த பணிப் பெண்கள் ஆடிப்பாடி அரசன் மகிழுமாறு செய்தனர். பொற் கிண்ணங்களில் அவர்கள் நறுமணமிக்க மதுவை எங்களுக்கு அளவிலாது வழங்கினர்; நாங்கள் கொண்ட நடைத்துயர் அகன்றது. அரண்மனையின் ஒரு பகுதியில் நாங்கள் தங்கினோம்.

காலையில் கிளர்ச்சியோடும் யான் எழுந்தேன். முதல்நாள் என்னைக் கண்டவர் 'இவன் நேற்று வந்தவன் அல்லன்' என்று ஐயுற்று வியப்பாக நோக்கினர்.

நறுமணக் கலவை யான் பூசி இருந்ததால், வண்டுகள் மொய்த்தன. நான் கனவு காண்கிறேனோ என நினைத்தேன்; இல்லை நனவுதான் என உணர்ந்தேன். புழுக்கிய இறைச்சி, பொரித்த இறைச்சி ஆகியவற்றை ஒவ்வொரு வேளையும் வாயில் இப்பாலும் அதுக்கிச் சுடச்சுட உண்டேன். பல்வகைப் பண்டங்களும், வெண்சோற்று வகையும் தொடுகறி வகைகளும் மூச்சுமுட்ட யான் உண்டேன்; என் சுற்றத்தாரும் அப்படியே உண்டனர். கரட்டு நிலத்தில் உழுத கலப்பைபோல் எங்கள் பற்கள் தேய்ந்து விட்டன. பின்னர், நாங்கள் வந்து நாள்கள் பல சென்றமையின், எங்கள் ஊர்க்குத் திரும்ப எண்ணினோம்.

### *ஊர் திரும்ப எண்ணிய பொருநன் என்ன செய்தான்?

ஊர் திரும்ப எண்ணிய பொருநன், கரிகாலன் அமைவாக இருக்கும் தக்க பொழுதறிந்து, "நாங்கள் இங்கு வந்து நாளாயின; எங்கள் ஊருக்குச் சென்று உற்றார் உறவைக் காணும் விருப்பம் உண்டாகி விட்டது. நாங்கள் எங்கள் ஊர் போக விடை தருதல் வேண்டும்" என்று பணிவுடன் வேண்டினான்.

புன்முறுவல் தவழப் பொலிவுடன் இருக்கும் கரிகால் வளவன், சற்றே முகம் கடுத்தான்போல் மாறினான்; "எங்களை விட்டுப் போகப் போகின்றீரோ?" என வினாவினான். பின்னர், ஆறியவனாய் யானை, கன்று, ஊர்தி, ஆடை அணிகலன் எனப் பலவும் பரிசிலாக வழங்கினான். அவற்றைப் பெற்றவராய் எம் வறுமை தொலைந்தது என எண்ணி மகிழ்வோடு வருகின்றோம் என்றான்.

**★ கரிகால்வளவனின் சிறப்பியல்புகளாகப் பொருநன் கூறியவை எவை?**

பொருநனே, கரிகால் வளவனின் சிறப்பியல்கள் சிலவற்றையான் அறிந்தவாறு கூறுகிறேன். கேட்பாயாக!

கரிகாலன், வேலன் அனைய வீறுடையவன்.

தாயின் வயிற்றில் இருக்கும்போதே, (தந்தையை இழந்து விட்டவன் ஆதலால்)

அரசுரிமையுடனேயே பிறப்பு எய்தியவன்.

பிறந்து தவழும் காலம் முதலே வலிமையொடு விளங்கியவன். தன்குடிப் பெருமையின் அடையாளமாகிய ஆத்திமாலை சூடியவன்;

பனம்பூ மாலை அணிந்த சேரனையும், வேப்பம் பூ மாலையணிந்த பாண்டியனையும் வெண்ணிப் போர்க்களத்தில் வென்றவன்." என்றான்.

மேலும், "பொருநனே, நீ வளவனைக் கண்டு, உன் உறவினருடன் உன் வறுமை புலப்பட நேரில் நிற்பாய் என்றால், கன்றுக்குப் பாலூட்டும் காரான் போல உங்கள் வறுமை நீங்க வளமான பரிசில்கள் பல வழங்குவான்.

உன் பாடலைக் கேட்டு முன்னரே, பாசி படிந்த உங்கள் உடைகளை மாற்றிப் பொலிவமைந்த புத்துடைகள் உடுத்தத் தருவான். நறுமணமிக்க மது வகைகளை வேண்டா வேண்டா என்று நீங்கள் சொல்லுமளவு பொற் கிண்ணங்களில் வழங்குவான். உன் மனைவியின் சுருண்ட கூந்தலில் பொற்றாமரை மலர் அணியச் செய்வான். பொன்மாலை முத்துமாலை முதலியனவும் நல்குவான்.

நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் உன்னை ஏற்றி, அமரச் செய்து, ஏழடி தொலைவு பின்னாக வந்து வழியனுப்புவான். நீ வளமாக வாழ்வதுடன் பிறர்க்கும் வழங்கும் கொடையாளனாகப் புகழ் பெறுமாறு, விளை நிலங்களும் ஊர்களும் கொடுப்பான்" எனக் கரிகால் வளவனின் சிறப்பியல்களைக் கூறினான்.

**★பொருநனின் மனைவி எத்தகைய தோற்றப் பொலிவினளாக இருந்தாள்?**

பொருநன் மனைவி

**கூந்தல்,** ஆற்றோட்டத்தில் அமைந்து உயர்ந்தும் தாழ்ந்தும் கிடக்கும் கருமணல் போல் சுருண்டமைந்தது.

**நெற்றி,** முந்நாட் பிறைபோல் அமைந்தது.

**புருவம்,** கொல்லத்தக்க அம்புகளை ஏவும் வளைந்த வில்லைப் போன்றது.

**கண்கள்,** அழகும் குளுமையும் ஒருங்கே அமைந்தவை.

**வாயோ,** செவ்விய இலவ இதழ் போன்றது; இன் சொல்லே இயம்புவது;

**பற்கள்,** வரிசையுறத் தொடுக்கப்பட்ட முத்துச்சரம் அனையது,

**காதுகள்,** மகர மீன் வடிவிலான குழைகளையணிந்து ஊசலாடுவன; அக்காதுகளின் தோற்றம் கத்தரிகையின் கைவளைவு போல் அமைந்தன.

**கழுத்து,** பெண்மைக்கு இயல்பாகிய நாணத்தை யுடைய தாய்ப் பக்கம் பாராமல் முன் வளைவு கொண்டது.

**தோள்கள்,** பருத்ததும் திரட்சி உடையதுமாம் கல்மூங்கில் அன்னவை.

**முன்கை,** அழகமைந்த மயிர்ச் செறிவுடையது.

**விரல்கள்,** ஐவிரலிப்பூ எனப்படும் செங்காந்தள் பூவை ஒப்பன.

**நகங்கள்,** கிளியின் சிவந்து வளைந்த வாயை ஒப்பவை.

**மார்புகள்,** துரும்பும் இடைச் செலாச் செறிவும் எழுச்சியும் உடையவை.

**கொப்பூழ்,** ஆற்றுநீர்ச் சுழல்போல் அமைந்தது.

**இடுப்பு,** உண்டோ இல்லையோ என ஐயுறுமாறு சிறுத்து ஒடுங்கியது.

**உள்ளிடம்,** கருவண்டுகள் மொய்த்துக் கிடந்தாற் போன்றது, மேலே மேகலை என்னும் பன்மணியாரம் பூண்டது.

தொடைகள், பெண் யானையின் துதிக்கை போல் திரண்டு அமைந்தவை.

அடிகள், கணைக்காலில் இருந்து ஒழுங்குபட்டு வழியும் மயிருடையதாய், ஓடி வந்து இளைத்த நாயின் நாவு போன்றவை.

**குறிப்பு:** முடி முதல் அடிவரை வண்ணிக்கும் முகத்தால் அனைத்தும் உவமை மாலையாய் அமையினும், பெண்ணுறுப்பை வெளிப்படக் கண்டுரைப்பது போலக் காட்டும் வண்ணனைப்பகுதி ஒதுக்கித் தள்ளியிருக்க வேண்டுவதாம்!

வாழைப்பழத்தைத் தின்பான், தோலையும்; மாம்பழத்தைத் தின்பான் தோலையும் விதையையும், பலாச்சுளையைத் தின்பான், செதில் தோல் வழுக்கு, கொட்டை ஆயவற்றையும் விலக்கி உண்பான் அல்லவோ! இடக்கரடக்கு, மங்கலம், குழூஉக்குறி என்பவை கண்ட நாகரிக மண் இம்மண் என்பதை எண்ண வேண்டும்.!

***பொருநன் துணைவி யாழிசைக்கத் தொடங்கும் நிலையை ஆசிரியர் எவ்வாறு கூறுகிறார்?**

பொருநன் துணைவி, அரக்கை உருக்கிவிட்டாற் போன்ற செவல் நிலத்திலே நடக்கிறாள். பருக்கைக் கற்கள் பரவிக் கிடத்தலின் அவை குத்துகின்றன. நண்பகற் போதில் வெப்பம் மிக்குத் துயரூட்டுகின்றது; மரற்பழம் போல அடிகளில் கொப்புளம் எழுகின்றது. தளர்ந்தும் ஓய்ந்தும் தங்கியும் மெல்லென நடையிட்டு இலை இல்லாத மரத்து நிழலில் இருந்து கடவுளை வாழ்த்திப் பாடுகின்றாள்.

***யாழ் வடிவம் பற்றிப் பொருநராற்றுப்படை கூறுவது யாது?**

பொருநன் கொண்டது பாலையாழ்...

யாழின் பத்தர் அல்லது குடம், ஈர நிலத்தில் மான்குளம்பு அழுத்திய தடம்போல் நடுவுயர்ந்து இரண்டு பக்கங்களும் தாழ்ந்து அமைந்தது. யாழின் அடியும் முடியுமாம் இருதலையும் கூட்டித் தைக்கப் பெற்ற போர்வை, பொன் வண்ண மூட்டப்பட்ட தோலால் ஆயது.

இரண்டு பத்தர்களையும் சேர்த்தற்கு அடிக்கப்பட்ட ஆணிகள், நண்டின் கண் போன்றவை (நண்டின் கண் வேப்பம் பூப்போன்றது என்பதை அறிக).

பத்தரின் வாய், எட்டாம் நாள் திங்கள் – அரை வட்டத் திங்கள் – போன்றதும் உள்நாக்கில்லாத வாய் போன்றதும் ஆகும்.

யாழின் கரிய தண்டு, பாம்பு தலையெடுத்து நீட்டி நின்றாற் போன்ற தன்மையது.

யாழைக் கட்டிய வார்க்கட்டுகள், மகளிர் அழகுற அணியும் கைவளையல் போன்றவை.

விரலால் வருடி இசைக்கப்படும் நரம்புகள் தினைத் தவசத்தைத் தீட்டி எடுத்து ஒழுங்குற வைக்கப்பட்ட (தேனன்ன) நிறுத்தினது.

என்று பொருநர் யாழ் கூறப்படுகிறது.

***பொருநராற்றுப்படையில் சோழ நாட்டு வளமாகச் சொல்லப்படுவன எவை?**

சோழ நாடு, வள நாடு; சோழ வளநாடு என்பதே பெயர்; அவ்வளம் உடைமையால் சோழர் வளவர் என வழங்கப்பட்டார்.

மேட்டு நிலங்களில் எல்லாம் நெற் கூடுகளைக் காணலாம்.

தென்னஞ் சோலைகள் பெருகிக் கிடப்பன ஆதலால், ஆங்கெல்லாம் மக்கள் குடியிருப்புகள் ஆயின.

வீட்டை ஒட்டி வாழும் காக்கை குருதியொடு கலந்த ஊனுணவு வாய்ப்ப உண்ணும்.

வீடுகளைச் சூழ நொச்சிச் செடிகள் தண்மையாகத் திகழும். ஆங்கே காக்கைகள் விரும்பும் போதெல்லாம் உண்பதற்காக உணவை மறைத்து வைக்கும். கடற்கரைப் பகுதிகளில் மணல் மேடுகள் இருக்கும்; அவற்றில் உழவச் சிறுமியர் கோடிட்டு விளையாடி மகிழ்வர்.

ஆண் மயில்கள் பாகல் பழத்தையும் பலாச் சுளையையும் தின்று மகிழும். அவற்றின் பெடையாம் மயில்கள் அழைக்கும்போது காஞ்சி மருத மரங்களிலிருந்து பறந்து சென்று அவற்றொடு கூடும்.

அப்பொழுது யாழின் இசையென வண்டுகள் ஒலிக்க அவ்வொலிக்குத் தகத் தோகை விரித்து வெண்மணற் பரப்பில் நின்று ஆடும் எனச் சோழ நாட்டின் வளத்தைக் கூறுகிறார்.

***சோழநாட்டிலே நானில வளமும் கலந்து கிடத்தலை ஆசிரியர் எவ்வாறு நயமுறக் கூறுகிறார்? (கலந்து கிடந்தல் - மயங்குதல்; திணை மயக்கம்)**

"நீர்வளமிக்க நாடு சோழநாடு; ஆதலால் எங்கும் கரும்பும் நெல்லும் செழிப்பாக வளரும். அடும்பு, பகன்றை, புன்கு, ஞாழல் முதலாய மரங்கள் செறிவாக விளங்கும். அங்கே வாழும் மக்களுக்கு அவ்வயல் நிலப்பகுதியில் வெறுப்பு ஏற்படுமானால், காடு சார்ந்த பகுதியிலேயே சென்று வாழ்வர். அங்கே காட்டு மல்லிகை, முல்லை, தேற்றா, கொன்றை காயா முதலிய மரஞ்செடி கொடிகள் பெருக வளர்ந்து கிடக்கும். காட்டு நிலமாகிய முல்லை நிலத்து வாழ்தலில் உவர்ப்பு உடையவரானால், மற்றை நிலங்களிலே சென்று வாழ்வர்.

கடற்பகுதியில் இறால் மீன்கள் மிக்கிருக்கும். அவற்றை உண்ட நாரைகள் புன்னை மரக் கிளைகளிலே வந்து தங்கும். அதன்பின் கடலை அடுத்துள்ள அப்புன்னை மரத்தின் மேல் கடலலை மோதி எழுதலால் உண்டாகும் நீர்த்துளிகளுக்கும் கடல் அலை ஒலிப்புக்கும் அஞ்சியவாய் வாழை மரங்களில் தங்கும்.

கடற்கரைக் கானல்சார் ஊர்களில் சுரபுன்னை, தென்னை, கமுகு முதலியவை செறிந்து விளங்கும். அச்செறிவின் இருண்மையால் பேராந்தைகள் ஆங்குத் தங்கும்.

நெய்தல் நில வாணராம் பரதவர்கள் அந்நில வாழ்வில் வெறுப்படைந்தனர் என்றால், மலை நிலமாம் குறிஞ்சிக்குச் செல்வர். அங்கே தேனும் கிழங்கும் பெற்றுக் கொண்டு மலை வாணர்க்குத் தாம் கொண்டு சென்ற மீன் நெய், மது ஆயவற்றைப் பண்ட மாற்றாக வழங்கி இருபாலும் இன்புறுவர்.

மருத நிலத்து வாழும் கோழிகள் முல்லை நிலத்துக் கிட்டும் தினையைத் தின்னும். மலைவாழ் மந்திகள் கடற்கரை உப்பங்கழிகளில் உவப்பாக மூழ்கித் திளைக்கும்.

உப்பங் கழிகளில் இருந்து எழுந்த நாரைகள் மலையிடத்துத் தங்கி மகிழும். இவ்வாறு நானில வளங்களும் கலந்து கிடந்து நலங் கொள்ள வைப்பது சோழநாடு" என ஆசிரியர் முடத்தாமக்கண்ணியார் பாடுகின்றார்.

***வறட்சிமிக்க காலத்திலும் சோழநாட்டின் வளம் குன்றாமையை ஆசிரியர் எவ்வாறு கூறுகிறார்?**

"வெயில் வருத்தும் கடுங் கோடை நாளில் தாமரை முதலாம் நீர்க்கொடிகளும் தீய்ந்து போகும்.

பசுமை தவழும் மரக்கிளைகளும் கரிந்து போகும்.

மலை முகடுகளில் இருந்து இழிந்து வரும் அருவிகளும் நீரற்று வறண்டு போகும்.

வறண்ட முகில்கள் கடலில் படிந்து நீரை முகத்தல் செய்யா.

இத்தகையது வறட்சிக் காலம்"

எனச் செயற்கைப் பாலையமைந்த நிலையை ஆசிரியர் கூறுகிறார்.

பின்னர் இத்தகைய வறட்சிக் காலத்திலும், நுங்கும், நுரையுமாகக் காவிரி பொங்கி நரைக்கொடி, நரந்தம் புல், அகில், சந்தனம் முதலியவற்றை நீராடும் துறைகளில் கொழித்துத் தள்ளும். குளங்களிலும் கரைசார் ஊர்களிலும் புகும்.

நீராட விரும்பிய மகளிர் நீராட்டுக் கொள்வர்.

நெல் அறுப்பவர் அறுத்துக் குவித்த நெற் போரை அடுக்கி மலைபோல் குவிப்பர்.

உழவர்கள் கடாவிடுதலாம் பிணையல் அடித்து நெல்லைக் குவியல் ஆக்குவர்.

குவித்த நெல்லை அள்ளிக் குதிர்களில் சேர்ப்பவர் சேர்ப்பர்.

ஒரு வேலி எனப்படும் நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளையும். இவையெல்லாம் காவிரி வளத்தால் உண்டாகும்" என்று சோழநாட்டின் குறையா வளத்தைக் குறிப்பிடுகிறார்.

குறிப்பு: காவிரி வளத்தை மேலும் விரிவாக அறிய விரும்புவார், கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் கரிகாற் சோழனைப் பற்றிப் பாடப்பட்ட **பட்டினப்பாலை** என்னும் பாட்டில் அறியலாம். பத்துப்பாட்டில் ஒன்பதாம் பாடல் அது.

பாடும் புலவர்கள் வேறு வேறானவர்; பாடப்படும் புரவலனும் காவிரியாறும் ஒருவரும் ஒன்றுமேயாம்.

கரிகாலன் என்பானும், திருமாவளவன் என்பானும் வேறு வேறானவர் என்பாரும் உளர்.

***கரிகாலன் வெண்ணிப்போர் வெற்றியைப் பொருநராற்றுப்படை எவ்வாறு கூறுகிறது? வேறு நூல்களில் அது கூறப்பட்டுள்ளதா? விளக்குக.**

கரிகாலனின் வெண்ணிப் போர் பற்றிப் **புறநானூறு** கூறுகின்றது(66). அதனையும் அவ்வெண்ணியிலேயே பிறந்து வாழ்ந்த குயத் தொழிலாட்டியாம், **வெண்ணிக் குயத்தியார்** என்பவரே பாடுகின்றார்.

"களி இயல் யானைக் கரிகால் வளைவ!
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் **வெண்ணிப் பறந்தலை**
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே"

என்று பாடுகிறார்.

கரிகால் வளவன் போரில் மதயானை போலத் தாக்குபவன் எனவும், அவன் ஏவிய வேல் சேரமான் பெருஞ்சேரலாதன் மார்பில் பட்டுப் புறத்தே துளைத்துப் போய்விட்டதால், சேரமான் அப்புண்ணைப் புறமுதுகு இட்டதால் ஏற்பட்டதோ என உலகம் ஐயுறும் என நாணங் கொண்டு வடக்கிருந்து உயிர் துறந்தான் என்றும் கூறுகிறார்! அச்செயலால் அச்சேரன் சான்றோர் புகழும் புகழாளன் ஆனான் என்றும் கூறுகிறார். பழமொழி சிலப்பதிகாரம் கலிங்கத்துப்பரணி ஆகிய நூல்களிலும் இவன் புகழ்பாடப் படுகின்றது.

**⋆ கரிகாலன் என்னும் பெயரை விளக்குக.**

இளமையில் நெருப்பால் சுடப்பட்ட காலை யுடையவன் ஆதலால், கரிகாலன் எனப்பட்டான், எனப் பழமொழி கூறுகின்றது. பொருநராற்றுப்படை இணைப்பாக உள்ள வெண்பாக்களுள் ஒன்று, "கரிகாலன் கால்நெருப்புற்று" என்கிறது. அது குடுமியான் மலைக் கல்வெட்டில் உள்ளதாகக் குறிப்பார் உ.வே.சாமிநாதையர்.

ஆனால்,

"முலைக்கோள் விடா அ மாத்திரை ஞெரேரெனத்
தலைக்கோள் வேட்டம் களிறட் டாஅங்கு..."

வெண்ணிப் போரில் இருவேந்தரையும் வென்றான் என்று கூறலாலும்,

"களிஇயல் யானைக் கரிகால் வளவன்"

என்று வெண்ணிக் குயத்தியார் கூறலாலும்,

கரிகளுக்குக் காலனாக இருந்தவன் 'கரிகாலன்' எனப் பெயர் பெற்றான் என்பது வரலாற்றுப் பெருமையாம். 'கரிபோலும் வேந்தர்களுக்குக் காலனாக' இருந்தவன் என்பதும் தகும் அல்லவோ!

**⋆ பேரூர்களின் பெருவிழாச் சிறப்பாகப் பொருநற்றுப்படை கூறுவது என்ன?**

பேரூர்களின் பெருவிழாக் காலங்களில் நாடளாவிய கலை வல்லார் பலரும் கூடுவர் என்றும், தம் கலைச்சிறப்பால் ஊரவர் உள்ளம் கொள்ளை கொள்ளக், கலைவல்லார் தம் உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் விருந்தும் விழுப் பொருள்களும் வழங்குவர் என்றும் அறிகிறோம் (1–3).

**⋆ பழநாள் வழக்குச் சொற்களும் இன்றும் மாறாது வழங்குவதற்குச் சான்று தருக?**

முறம், பெட்டி, பேழை முதலிய நாரால் பின்னப்பட்ட பயன்பாட்டு வீட்டுப் பொருள்கள் பழுதுபட்டு விட்டால், அவற்றின் சிதைவை நீக்குவார் 'பொல்லம் பொத்தலையோ! பொல்லம் பொத்தலையோ' என்று சிற்றூர்களில் கூவி வருதல் இன்றும்

காணவாய்த்தல் உண்டு. அந்நாளில் கிழிந்த உடையின் பொத்தலைத் தைத்தலைப் "பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை" என்றுள்ள ஆட்சி இன்றும் பிறிதொரு வகையால் வழங்கப்படுகிறது. உளியால் பொள்ளப்படா வடிவப் பிள்ளையார் 'பொல்லாப் பிள்ளையார்' என வழக்குண்மையும் அறியத் தக்கது.

'அண்ணா' (அண்ணம் நா) என்பது 'அண்ணாக்கக்குடி' என்று நீரைக், குவளை வாயில் படாமல் குடித்தலைச் சுட்டுதல் பெருவழக்கு. அவ்வாட்சி,

"அண்ணா இல்லா அமைவரு வறுவாய்"

என்பதில் இடம் பெறுகின்றது(12) அண் நா உண் (உள்) நா.

***தமிழிசையின் தனிச் சிறப்பாக இவ்வாற்றுப்படை கூறுவதென்ன?**

வழியே செல்வாரை வலிது கொள்ளையடிப்பாரும், தம் கொடிய கருவிகளைப் போகட்டு விட்டு அமைந்து கேட்கும் செவியராகி, அச்சமற்றுப் போகுமாறு இசை செய்யும் என்பதை,

"ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை" (21, 22)

என்பது இசையின் சிறப்பை வெளிப்படுத்துவதாம்.

'ஏழிசைக்கிழவ' என விளிப்பதும், வஞ்சியடிகள் இணைப்பதும்,

"நுரைத்தலை குரைப்புனல் வரைப்பகம் புகுதொறும்"

எனத் 'தனத்தன' என்னும் வாய்ப்பாட்டில் அடி முழுவதும் அமைப்பதும் இசைச் சிறப்பாம்.

***பொருநராற்றுப் படையால் துணிச் சிறப்பு, மதுச்சிறப்பு, அணிகலச் சிறப்பு என அறிவன எவை?**

**துணிச்சிறப்பு:**

"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுரி அன்ன அறுவை" (82-83)
"கொட்டைக் கரைய பட்டுடை" (165)

மதுச்சிறப்பு:

"பூக்கமழ் தேறல்' (156)

அணிகலச் சிறப்பு:

"எரியகைந் தன்ன ஏடில் தாமரை" (159) ஏடு-இதழ். பொற்றாமரை இது.

* முடத்தாமக் கண்ணியார் மூவேந்தரும் ஒருங்கிருத்தலை விரும்பினார் என்பது எப்படி விளங்கும்?

"முரசுமுழங்கு தானை மூவரும் கூடி

அரசவை இருந்த தோற்றம்" (54-55)

என்பதால் மூவேந்தரும் ஒன்றியிருக்க விரும்பியவர் என்பது விளங்கும்.

* புதுச்சொற்படைப்பாளர் முடத்தாமர் என்பது பொருந்துமா?

பொருந்தும். கத்தரிக்கோலை 'மயிர் குறை கருவி' என்பதும், (9) அரிவாளைக் 'கூனிக்குயம்' என்பதும் (242) இவர் புதுச் சொற்படைப்பாளர் என்பதன் சான்றாம்.

* பிறந்த குழந்தைக்குத் 'தேனெய்' புகட்டுதல் வழக்கம். மருந்துப் பொருளாக 'மீனெய்' உண்டு! இவற்றை முன்னரே தமிழகம் கொண்டிருந்தது என்பது எப்படிப் புலப்படும்?

"தேனெய்யொடு கிழங்குமாறியோர்

மீனெய்யொடு நறவு மறுகவும்" (214-215)

என்பதால் புலப்படும்.

***உவமை வல்லார் இக் கண்ணியார் என்பதை விளக்குக.**

உவமைகள் பல அடுக்கி மாலையாகத் தொடுக்க வல்ல இவர், புலவூணும், பலவூணும் உண்டதால், பல் தேய்ந்து விட்டதைக்,

"கொல்லை உழுகொழு ஏய்ப்ப" (117) (கொல்லை - காடு, கரடு) என்பது இவர் தம் உவமைப் படைப்புத் திறத்தைப் புலப்படுத்தும்.

***புரவலர்கள், புலவர்கள் கலைவல்லார் ஆயோரைப் போற்றிய சிறப்பாக இவ்வாற்றுப்படை கூறுவதென்ன?**

"பால்புரை புரவி நால்குடன் பூட்டி

காலின் ஏழடி பின் சென்று" (165-166)

விடுப்பர் (வழியனுப்புவர்) என்பது புரவலர் புலமையர்க்குத் தந்த சிறப்பாம்.

***பொருநாற்றுப்படைக்கும் பட்டினப்பாலைக்கும் உள்ள இயைபுகள் எவை?**

இரண்டும், கரிகால் சோழனைப் பற்றியவை.

இரண்டும், அகவலடியொடு வஞ்சியடி பயின்றவை.

இரண்டும், காவிரி வளம் சிறப்பப் பாடுபவை.

'கோட்டெங்கில் குலைவாழை' என்பது இரண்டிலும் இயைந்த தொடர் ஆகும். இவை இவ்விருபாட்டுகளின் இயைபுகளுள் சிலவாம்.

விலை ரூ.15

ஆக்கம் : பெரியார்

அறிமுக நூல் – 4

# பொருநர் ஆற்றுப்படை



இரா.இளங்குமரனார்

ஆக்கம் : பெரியார்